செ.வெ.எண் : 29/ பிப்ரவரி நாள் : 27.02.2021

**இராமநாதபுரம் மாவட்டம்**

**தேர்தல் நன்னடத்தை விதிமீறல்களை கண்காணிப்பதற்கு 4 சட்டமன்றத் தொகுதிகளில் 28 கண்காணிப்புக் குழுக்கள்**

**மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

இராமநாதபுரம் மாவட்டம், பட்டணம்காத்தான் சோதனைச்சாவடி பகுதியில் இன்று (27.02.2021) மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர்,இ.ஆ.ப., அவர்கள், தேர்தல் நன்னடத்தை விதிமுறைகள் செயல்படுத்தப்பட்டுள்ளதை தொடர்ந்து, பறக்கும் படை அலுவலர்களின் வாகன தணிக்கை பணிகளை நேரில் ஆய்வு செய்தார்.

தொடர்ந்து மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல்-2021 அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளதை தொடர்ந்து இராமநாதபுரம் மாவட்டத்தில் உடனடியாக தேர்தல் நன்னடத்தை விதிமுறைகள் அமல்படுத்தப்பட்டுள்ளன. மாவட்டத்திலுள்ள 4 சட்டமன்ற தொகுதிகளில் ஒரு தொகுதிக்கு மூன்று வீதம் மொத்தம் 12 பறக்கும் படை குழுக்களும் (Flying Squad team), 12 நிலைத்த கண்காணிப்புக் குழுக்களும் (Static Surveillance Team) ஒரு தொகுதிக்கு ஒரு வீடியோ கண்காணிப்புக் குழு வீதம் 3 குழுக்களும் என மொத்தம் 28 கண்காணிப்பு குழுக்கள் ஏற்படுத்தப்படுகின்றன.

ஒவ்வொரு குழுவிலும் துணை வட்டாட்சியர்/வட்டார வளர்ச்சி நிலை அலுவலர் தலைமையில் ஒரு காவல்துறை சார்பு ஆய்வாளர், 3 காவலர்கள், 1 வீடியோ பதிவாளர் என மொத்தம் 6 நபர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். கண்காணிப்பு பணியின்போது உரிய ஆவணமின்றி பணம்/பரிசுப் பொருட்கள் கைப்பற்றுகையில் இந்திய தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதல்களை முறையே பின்பற்றிட வேண்டும் எனவும், அதேவேளையில் இத்தகைய கண்காணிப்பு பணிகளின் காரணமாக பொதுமக்கள் பாதிக்கப்படாதவாறு பணியாற்றிட அலுவலர்களுக்கு அறிவுருத்தப்பட்டுள்ளது .

பொதுமக்கள் தேர்தல் தொடர்பான புகார்கள், குறைகளை தெரிவித்திட ஏதுவாகவும், தேர்தல் தொடர்பான விளக்கங்களை பெறவும், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 1950 என்ற கட்டணமில்லா சேவை எண் கொண்ட தேர்தல் கட்டுப்பாட்டு மையம் 24 மணி நேரமும் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. தேர்தல் கட்டுப்பாட்டு மையத்தில் பெறப்படும் புகார்கள் சம்பந்தப்பட்ட கண்காணிப்புக் குழு அலுவலர்களுக்கு தெரிவிக்கப்பட்டு உடனடி நடவடிக்கை மேற்கொள்ளும் வகையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், தேர்தல் தொடர்பான புகார்களை பொதுமக்கள் புகைப்படம், வீடியோவுடன் எளிதில் தெரிவித்திடும் வகையில் c-VIGIL என்ற செல்பொன் செயலியினை அறிமுகப்படுத்தியுள்ளது. ஸ்மார்ட்போன் வைத்திருப்பவர்கள் இந்த செயலியினை கூகுள் ப்ளேஸ்டோர் தளத்திலும் அல்லது தேர்தல் ஆணைய இணைய தளத்திலிருந்தும் பதிவிறக்கம் செய்து பயன்படுத்தலாம். இந்த செயலியின் மூலம் பெறப்படும் புகார்கள் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்த விவரங்கள் சம்பந்தப்பட்ட நபருக்கு குறுஞ்செய்தியாக அனுப்பிடும் வகையில் இந்த செயலி செயல்படுத்தப்பட்டுள்ளது என மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்வின்போது, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.இ.கார்த்திக்,இ.கா.ப., அவர்கள், இராமநாதபுரம் காவல் துணை கண்காணிப்பாளர் திரு.வெள்ளத்துரை, தேர்தல் வட்டாட்சியர் திரு.மார்ட்டின் உட்பட அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**